9th February 1959]

of foreign exchange applied for are still awaited. The Central Workshop will go into production only after receipt of all items of machinery required for the manufacture of metallic parts for Ambar charka sets.

**Sri A. VEDARATHNAM :** ஏராளமான அம்பர் சர்க்கா இந்த மாநிலத்தில் தேவையாயிருக்கிறது என்ற காரணத்தினால் அதற்கான இரும்புக் கருவிகள் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்கள் எப்பொழுது நம் மாநிலத்திற்கு கிடைக்குமென்று அரசாங்கம எதிர்பார்க்கிறது ? அது வரையில் வெளியில் இருந்துதான் வாங்கவேண்டுமா ? இங்கு செய்யக் கூடியவற்றையாவது செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** இதுபற்றி எல்லாவித முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுவருகின்றன. ஆனால் எப்பொழுது எல்லா இயந்திரங்களும் கிடைக்குமென்று நான் சொல்வதற்கில்லை.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR :** அம்பர் ராட்டைக் கொண்டு நூற்பவர்களுக்கு அதிகக் கூலி கிடைப்பதால், இரும்பு கிடைக்கவில்லை என்ற காரணத்தை வைத்து நிதானமாக இல்லாமல் வெளியிலிருந்து இரும்பு தருவித்து சீக்கிரம் இந்த அம்பர் ராட்டை எல்லாயிடங்களிலும் பரவலான முறையில் கிடைக்கும்படிச் செய்வதற்கு அரசாங்கம் துரிதமாக வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க முயற்சி எடுக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** அங்கத்தினர் கூறியது போல் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பது என் பதிலிருந்து விளங்கும்.

**Srimathi RAJATHI KUNCHITHAPATHAM :** அம்பர் சர்க்கா செய்வது ஒரு இலாகாவும் அதை வினியோகிப்பது இன்னொரு இலாகாவும் என்று இருப்பதால் வினியோகம் செய்வதில் தடை ஏற்படுகிறது. அம்பர் சர்க்கா டயரக்டர் அவர்களிடத்தில் அம்பர் சர்க்கா செய்கிற பொறுப்பையும் கொடுத்தால் அவைகளை விநியோகிப்பதிலும் புது பரிசிரமாலயங்கள் திறப்பதிலும் தாமதம் ஏற்படாது என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து அதற்கு ஒரு விளக்கம் தருவார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** அம்பர் சர்க்கா செய்வது ஒரு தொழில். ஆகவே அது தொழில் இலாகாவிடம் இருக்கிறது. அதையும் காதி டயரெக்டர் அவர்களிடம் கொடுத்தால் அவர் வேலை அதிகப்படும். இப்பொழுதுள்ள முறையில் எவ்வித கஷ்டமும் இல்லை.

*House-rent allowance*

* 129 *Q*.—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to give House-rent allowance to Government servants, who draw less than Rs. 150 per mensem, serving in villages?

The Hon. Sri C. SUBRAMANIAM : There is no such proposal under consideration.

Sri A. A. RASHEED : Sir, do the Government servants working in the City and towns get any house-rent allowance? If so, how much?

The Hon. Sri C. SUBRAMANIAM : They get house-rent allowance. But I do not have the figures with me now.